# பள்ளி கொண்ட மாயம்




பள்ளி கொண்ட மாயமென்ன அரங்கனே- நீர் ,

பள்ளி கொண்ட மாயமென்ன !

வேதம் காக்க ஆழ்கடலில் மூழ்கிய களைப்பா ,

தேகம் நோக மந்திரமலை தாங்கியகளைப்பா- அன்றி ,

பாதம் நோக ஏழுலகும் அளந்து நின்ற களைப்பா!

பள்ளி கொண்ட மாயமென்ன...

ஏழு மரங்களை ஓரம்பினால் சாய்த்த களைப்பா ,

ஏழு எருதுகளை பொருதி வென்ற களைப்பா- அன்றி ,

ஏழு உலகையும் உண்டுபின் உமிழ்ந்த களைப்பா!

பள்ளி கொண்ட மாயமென்ன......

**************************************************